# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTARTION / COMMERCE (EXTERNAL) - 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## BBA / COM 38 – ORGANIZATIONAL BEHAVIOUR

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. பின்வரும் விடய ஆய்வினை வாசித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

**ரமேஷ் கம்பனியை விட்டு விலகுதல்**

நல்ல மனிதர்கள் - பெறுமதியான ஊழியர்கள் - நாள்தோறும் அவர்களது வேலையை விட்டும் விலகிக் கொண்டிருக்கின்றனர். வழக்கமாக, அவர்கள் வேறு எங்காவது நல்ல நிலைகளுக்காகவே விலகுகின்றனர். ரமேஷ் புகழ்பெற்ற காப்புறுதிக் கம்பனியொன்றில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஒரு ஊழியராவார். அவர் தற்போதிருக்கின்ற வேலையிலிருந்து விலகுவதற்கு விண்ணப்பித்து அதற்கான நேர்காணலின்போது பின்வரும் கருத்தினைத் தெரிவித்தார்.

"இந்தத் தொழில் எனக்கு சரியானதல்ல., தீர்மானங்களின்போது நான் கூடுதலான உள்ளீடுகளை அளிப்பதற்கு எனக்கு விருப்பமாக உள்ளது. ஏனெனில், அது என்னால் என்ன செய்ய முடியும் என்பதைக் காட்டுவதற்கான ஒரு வாய்ப்பாக அமையும் என்பதால், நான் நல்லது செய்கின்றேனா இல்லையா என்பது பற்றிய போதுமான பின்னூட்டல் எனக்குக் கிடைப்பதில்லை. இக்கம்பனியானது ஊழியர்களை இருட்டிலேயே வைத்துள்ளது."

மேலும் இக்கம்பனியானது உம்மை தக்க வைத்துக்கொள்ள ஏதாவது செய்துள்ளதா எனக் கேட்டபோது "பெரும்பாலும் இல்லை" என ரமேஷ் பதிலளித்தார்.

ஏன் அதிகமான ஊழியர்கள் அவர்களுடைய வேலையிலிருந்து விலகுகின்றனர். ஏன் ஏனைய சிலர் குறைந்தளவிலான பெறுபேற்றினை எய்தும் நிறுவனங்களில் தங்கியிருக்கின்றனர்? ஏனென்றால் நல்ல ஊழியர்களை நிறுவனத்தில் தக்க வைத்திருப்பதற்கான சரியானதொரு முறைமை காணப்படாமை இதற்குப் பொதுவான காரணமாகும் என ரமேஷ் சிந்திக்கின்றார்.

ஏனைய சில நிறுவனங்கள் ஊழியர்கள் மீது நேரான பார்வையுடையதாகவும், அவர்களைத் தக்க வைத்துக்கொள்ளள நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஊழியர் புரள்வினைக் குறைத்தல், தரத்தினை அதிகரித்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், பயிற்சி முதலீடுகளை பாதுகாத்தல் போன்றவற்றை அடைந்து கொள்ளும் வேளையில் தன் கம்பனியானது எப்போதாவது இந்நிலைமைக்கு மாறுமா என ரமேஷ் சந்தேகிக்கின்றார்.

(அ) ரமேஷ் ஏன் நிறுவனத்தினை விட்டு விலகுவதற்கான தீர்மானத்தினை எடுத்தார்? (06 புள்ளிகள்)

(ஆ) ரமேஷ் இலிருந்து இந்நிறுவனம் கற்றுக்கொள்வதென்ன? அதற்கு நிறுவனம் என்ன செய்ய முடியும்? என்ன செய்ய வேண்டும்? . (06 புள்ளிகள்)

(இ) இந்நிறுவன முகாமையாளராக உம்மைக் கருதிக்கொண்டு, ரமேஷ் இனைத் தக்க வைத்துக்கொள்ள எவ்வாறு நீர் அணுகுவீர் எனக் கூறுக. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. (அ) நிறுவன நடத்தை தொடர்பான எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்துவதில் முகாமையாளர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர்''

இன்று முகாமையாளர்கள் முகங்கொடுக்கின்ற அவ்வாறான சவால்களை விளக்குக. . (06 புள்ளிகள்)

(ஆ) தனிநபர் ஒருவருடைய ஆளுமையை அவரது பிறவிக் குணம் அல்லது பரம்பரைக் காரணிகளே தீர்மானிக்கின்றன. இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(இ) புலக்காட்சி தொடர்பான பொதுவான தவறுகளை (Perceptual Errors) சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. "நேரான மனப்பாங்கு (Positive Attitude) சிறந்த பெறுபேற்றிற்கு இட்டுச்செல்லும்."

(அ) மனப்பாங்கின் கூறுகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(ஆ) நேர் மனப்பாங்கினால் நிறுவனமொன்றில் முன்னேற்றிக்கொள்ளக்கூடிய முகாமைத்துவத் திறன்கள் பற்றி விளக்குக. (07 புள்ளிகள்)

(இ) ஒருவருடைய தொழில் திருப்தி தொடர்பான மனப்பாங்கினை மதிப்பீடு செய்வதில் கருத்திற்கொள்ளப்படுகின்ற காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. (அ) "மக்கள் பல காரணங்களுக்காக குழுக்களில் இணைகின்றனர்."
தனிநபர்கள் ஏன் குழுக்களாக இணைகின்றனர் எனக்கூறி, குழு நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) "நிறுவனமொன்றில் அதிகரித்த குழு இணைவு அல்லது ஒட்டும்தன்மை (Group Cohesiveness) ஆனது உற்பத்தித் திறன் (Productivity) அதிகரிப்புக்கு இட்டுச்செல்லும்" இக்கூற்றினைப் பகுப்பாய்வு செய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. (அ) "மனித இனங்களுக்கு அழுத்தம் (Stress) தவிர்க்க முடியாததொன்றாகும்."
அழுத்தத்தைத் தோற்றுவிக்கும் காரணிகள், அதன் விளைவுகள் பற்றி பகுப்பாய்வு செய்வதுடன், அழுத்தத்தைக் குறைப்பதற்கு முகாமையாளர்களால் பின்பற்றப்படும் உபாயங்கள் பற்றிக் கூறுக.

(10 புள்ளிகள்)

(ஆ) முரண்பாட்டிற்கும் (Conflict) நிறுவன மாற்றத்திற்கும் இடையிலான தொடர்பினை விமர்சனரீதியாகப் பகுப்பாய்வு செய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

***